**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

---

IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, CHENNAI

**C.C.No.32/2013**

PROSECUTION WITNESS No. PW 3

| | | |
|---|---|---|
| Name | : | Balamurugan |
| Father Name | : | |
| Age | : | |
| Address | : | |

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 on the 11th day of July, 2024.

( எதிரி 1 மற்றும் எதிரி 2 சார்பில் 355 BNSS பிரிவின் படி மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

முதல் விசாரணை :-

நான் தற்போது பழைய எண் 4, GN செட்டி லேன், மயிலாப்பூர் , சென்னை என்ற முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது சென்னையில் உள்ள BPO கம்பெனியில் வேலை பார்க்கிறேன். 2015 ம் ஆண்டு வரை Sriram பைனான்சில் பணி ஓய்வு பெற்றுள்ளேன். சம்பவம் நடக்கும் போது, நான் Sriram பைனான்ஸ், சௌகார்பேட்டை கிளையில் மேனேஜராக வேலை பார்த்தேன். நான் 2009 முதல் 2015 ஆம் ஆண்டு வரை நான் Sriram பைனான்சில் வேலை பார்த்தேன். அந்தக் கிளை Franchise concept ல் இயங்கி இருந்தது. அதில் 100 கணக்காக Franchises இருந்தார்கள். அதில் எதிரி 1 அமர்சந்த் கோத்தாரியும் ஒருவர். Franchise எல்லோரும் லோன் கேட்டு documents கொண்டு வந்து கொடுப்பார்கள். நாங்கள் documents பெற்றுக்கொண்டு payments செய்வோம். ஆனால் அந்த documents ல் உள்ள குறைபாடுகளுக்கு Franchises தான் பொறுப்பு. எதிரி 1 அமர்சந்த கோத்தாரிக்கு சுமார் 1000 documents அடிப்படையில் payments கொடுத்துள்ளோம். ஒவ்வொரு மாதமும் installment தொகையை சரியாக செலுத்தி வந்தார். ஒரு சில அக்கவுண்டுகளுக்கு முதல் 6 மாதத்திற்கு பிறகு payments வரவில்லை. அதனால் நாங்கள் field officer

மூலமாக அதில் சம்மந்தப்பட்ட வாகனங்கள் இருக்கிறதா, இல்லையா என்று verify பண்ணச் சொல்வோம். அதன் மூலம், 13 வாகனங்களுக்குரிய RC books கிடைத்தது, 16 வண்டிகளுக்கு RC books கிடைக்கவில்லை. 13 RC books களை சரிபார்த்ததில், வாகனத்தின் எண், உரிமையாளர் பெயர், வாகனத்தின் type ஆகியவை முன்னுக்கு பின் முரணாக இருந்தன. இந்த தகவலை நாங்கள் எங்கள் தலைமை அலுவலகத்திற்கு தெரிவித்தோம். அதன் அடிப்படையில், தலைமை அலுவலகத்தின் மூலம், போலீசில் புகார் கொடுத்தார்கள். எனக்கு தெரிந்த வரை எதிரி 1 அமர்சந்த கோத்தாரி, Sriram பைனான்ஸ்க்கு ரூபாய் 3 கோடி வரை அசல் தொகையாக செலுத்த வேண்டியிருந்தது. போலீசார் என்னை விசாரித்தார்கள். **(**ஆவணங்கள் குறியீடு செய்ய கால அவகாசம் கேட்டுக் கொணடதற்கிணங்கி முதல் விசாரணை இத்துடன் நிறுத்தி வைக்கப்படுகிறது**.)**

| |
|---|
| Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct. |
| **Principal Judge** |